

# என்னைப் பின்பற்றி வாருங்கள்–

## மூப்பர்கள் குழுமம் மற்றும் ஒத்தாசைச் சங்கத்துக்காக

*இந்த ஆதாரங்கள் சுவிசேஷ நூலகம் மற்றும் comefollowme.lds.org. -ம் காணப்படும்*



# நாம் ஏன் குழும மற்றும்

## ஒத்தாசைச் சங்க கூட்டங்கள் நடத்துகிறோம்?

இந்த பிற்காலத்தில், அவரது இரட்சிப்பின் பணியை நிறைவேற்ற உதவ தேவன் ஆசாரியத்துவத்தை மறுஸ்தாபிதம் செய்து, ஆசாரியத்துவக் குழுமங்களையும் ஒத்தாசைச் சங்கத்தையும் அமைத்திருக்கிறார். இதனிமித்தம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாம் மூப்பர்கள் குழுமம் மற்றும் ஒத்தாசைச் சங்க கூட்டங்களில் கூடும்போது, தேவனின் பணியை நிறைவேற்ற உதவ நாம் என்ன செய்யப்போகிறோம் என கலந்துரையாடி திட்டமிடுகிறோம். ஆற்றல் மிக்கவையாக இருக்க, இக்கூட்டங்கள் வகுப்புக்களை விட அதிகப்படியானதாக இருக்க வேண்டும். இரட்சிப்பின் பணி பற்றி ஆலோசிக்கவும், சபைத்தலைவர்களின் போதனைகளிலிருந்து, பணி பற்றி ஒன்றாக கற்கவும், அதை நிறைவேற்ற திட்டமிடவும் நம்மை ஒழுங்கமைக்கவும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

# முதல் ஞாயிற்றுக்கிழமை

## ஆலோசனைக்குழு கூட்டங்கள்

ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில், மூப்பர்கள் குழுமம், மற்றும் ஒத்தாசைச் சங்க கூட்டங்களிலும் ஒரு ஆசிரியரால் போதிக்கப்படுகிற பாடங்கள் சேர்க்கப்படவில்லை. மாறாக மூப்பர்கள் குழும மற்றும், ஒத்தாசைச் சங்க தலைமைகள் ஆலோசனைக்குழு கூட்டங்களை வழிநடத்துகின்றன. இந்த முதல் ஞாயிற்றுக்கிழமை ஆலோசனைக்குழு கூட்டங்களில், ஒவ்வொரு மூப்பர்கள் குழுமமும், ஒத்தாசைச் சங்கமும், உள்ளூர் பொறுப்புகள், சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்கள் பற்றி ஒன்றாக ஆலோசனை செய்கின்றனர், ஒருவருக்கொருவரின் உள்ளுணர்வுகள் மற்றும் அனுபவங்களிலிருந்து கற்கின்றனர், ஆவியிடமிருந்து பெற்ற உள்ளுணர்வின்படி செயல்பட வழிகளைத் திட்டமிடுகின்றனர். அக்கலந்துரையாடல்கள் பொருத்தமான வசனங்களையும், வாழும் தீர்க்கதரிசிகளின் போதனைகளையும் சேர்க்க வேண்டும்.

அனைத்து ஆலோசனைக்குழு கூட்டங்களும் ஒன்றுபோலில்லை. ஒரு வெற்றிகரமான ஆலோசனைக்குழுவை வழிநடத்த தலைமைகளுக்கு உதவ சில கருத்துக்கள் இங்கே உள்ளன



## முதல். ஞாயிற்றுக்கிழமை கூட்டங்களுக்கான தலைப்புக்கள்

தலைமைக் கூட்டங்கள், தொகுதி ஆலோசனைக்குழு கூட்டங்கள், பகுதி திட்டம், அங்கத்தினர்களுக்கு ஊழியம் செய்யும்போது தலைவர்களுக்கு ஏற்படும் உள்ளுணர்வுகள், மற்றும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதல்களிலிருந்து ஆலோசனைக்குழு கூட்ட கலந்துரையாடல் தலைப்புகள் பற்றிய கருத்துக்கள் வரலாம். கீழே உள்ள தலைப்புகள் ஆலோசனைகள் மட்டுமே. அவர்கள் உணர்த்தப்பட்ட பிற தேவைகள் பற்றி தலைவர்கள் அறிந்திருக்கலாம்.

- நம்மைச் சுற்றிலுமிருப்பவர்களுக்கு ஊழியம் செய்ய நாம் என்ன செய்ய முடியும் (மோசியா 23:18 பார்க்கவும்).
- நமது பல்வேறு பொறுப்புக்களை நாம் எவ்வாறு முன்னுரிமைப்படுத்தலாம்?
- நமது நண்பர்கள் மற்றும் அயலாருடன் நாம் எவ்வாறு சுவிசேஷத்தைப் பகிரலாம்? (ஆல்மா 1:7 பார்க்கவும்).
- பொருத்தமற்ற ஊடகம் மற்றும் ஆபாசப்படத்திலிருந்து நம்மையும் நமது குடும்பங்களையும் எப்படி பாதுகாக்க முடியும்?
- நமது தொகுதியிலுள்ள நமது பிள்ளைகள் மற்றும் இளைஞர்களை உருவாக்கவும் பெலப்படுத்தவும், நாம் என்ன செய்யலாம்?
- குடும்ப வரலாற்று பணியிலும் ஆலய ஆராதனையிலும் நாம் எவ்வளவு அதிகமாக ஈடுபடலாம்?
- நமது சுவிசேஷம் பற்றிய கேள்விகளுக்கு பதில் தேடும்போதும், சுவிசேஷம் பற்றி ஆழமான புரிதலுக்காகவும் நாம் கர்த்தரின் உதவியை எப்படி கோர முடியும்?
- கர்த்தர் மற்றும் அவரது சுவிசேஷம் பற்றிய நமது சாட்சியை எவ்வாறு பெலப்படுத்தி, நமது குடும்பங்கள் ஆவிக்குரிய விதமாக சுயசார்புடனிருக்க உதவ முடியும்?

### ஆலோசனைக்குழு கூட்டத்துக்கு முன்னால்

**செய்யவும்:**

- உள்ளூர் தேவைகளையும், சந்தர்ப்பங்களையும், சவால்களையும் அடையாளம் காணுங்கள்.
- கலந்துரையாட ஒரு தலைப்பை ஜெபத்தோடு தேர்வு செய்யுங்கள்.
- தங்கள் சிந்தனைகளையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள குழும அங்கத்தினர்களை அல்லது ஒத்தாசைச் சங்க சகோதரிகளை அழைக்கவும்.

**செய்யாதீர்:**

- ஒரு பாடத்தை ஆயத்தம் செய்யுங்கள்.
- மனதில் ஒரு குறிப்பிட்ட தீர்மானத்துடன் அல்லது செயல் திட்டத்துடன் வாருங்கள்.

### ஆலோசனைக்குழு கூட்டத்தின்போது

**செய்யவும்:**

- முந்தய கூட்டங்களிலிருந்து உள்ளுணர்வுகள் மற்றும் திட்டங்களை கொண்டு செயல்பட்டதால் அவர்கள் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள அங்கத்தினர்களை அழைக்கவும்.
- கூட்டத்தின் தலைப்பை அறிமுகம் செய்து, வேதங்களிலிருந்தும், தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளிலிருந்தும், பரிசுத்த ஆவியானவரிடமிருந்தும் தீர்வுகளையும் வழிநடத்துதல்களையும் தேடி, அது பற்றி ஒன்றாக ஆலோசிக்க அங்கத்தினர்களை ஊக்குவிக்கவும்.
- கலந்துரையாடப்பட்டதன்படி செயல்பட திட்டமிடவும். இதில் குழுத்திட்டங்கள் அல்லது சொந்தமாக தனிநபர்கள் தீட்டிய திட்டங்களும் அடங்கலாம்.

**செய்யாதீர்:**

- கலந்துரையாடலில் ஆதிக்கம் செலுத்துதல்.
- உங்கள் கருத்துக்களால் பிறரை திருப்திபடுத்த முயலுதல்.
- உணர்வுபூர்வ அல்லது இரகசிய பிரச்சினைகளை கலந்துரையாடுதல்.
- ஒரு பாடம் கற்பித்தல்.
- ஒருவரை பங்கேற்க கட்டாயப்படுத்துதல்.

### ஆலோசனைக்குழு கூட்டத்துக்குப் பிறகு

**செய்யவும்:**

- ஆலோசனைக்குழு கூட்டத்தின் போது போடப்பட்ட திட்டங்களையும் பணிகளையும் பற்றிய பின்தொடர்ச்சி.
- அழைப்புக்கள் அல்லது பிற காரணங்களினிமித்தம் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாதவர்களை சேர்த்துக்கொள்ள வழிகள் கண்டு பிடிக்கவும். போடப்பட்ட திட்டங்கள் பற்றி அவர்கள் தெரியச் செய்யவும்.
- வருங்கால கூட்டங்களில் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள அங்கத்தினர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கவும்..

“இந்த ஆலோசனைக் கூட்டத்தின் அழகிய விஷயங்களில் ஒன்று, கூட்டத்தின் கடைசியில் நீங்கள் உண்மையாகவே ஒரு செயல் திட்டத்தை வகுக்கிறீர்கள்.”

—சகோதரி ஜீன் பி. பிங்காம், ஒத்தாசைச் சங்க பொதுத்தலைவர்

# இரண்டாம் மற்றும் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமை கூட்டங்கள்

ஒவ்வொரு மாதத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் மூப்பர்கள் குழுமங்களும், ஒத்தாசைச் சங்கங்களும் சபைத் தலைவர்களின் மிக அண்மை பொது மாநாட்டு, போதனைகளிருந்து கற்பார்கள். பிரதான தலைமை அங்கத்தினர்கள் மற்றும் பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தினரின் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். எனினும் உள்ளூர் தேவைகள் மற்றும் ஆவியின் உணர்த்துதல் அடிப்படையில் மிக அண்மை மாநாட்டின் எந்த செய்தியும் கலந்துரையாடப்படலாம்.

அதிகமான காரியங்களில், மூப்பர்கள் குழுமம் அல்லது ஒத்தாசைச் சங்க தலைமை அங்கத்தினர்களின் தேவைகளின் அடிப்படையில் ஒரு மாநாட்டு செய்தியை தேர்ந்தெடுப்பார்கள். ஆயினும் ஆயர் அல்லது பிணையத் தலைவர் உள்ளீடு கொடுக்கலாம். ஆவியின் உணர்த்துதல் அடிப்படையில் அண்மை முதல் ஞாயிற்றுக்கிழமை ஆலோசனைக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட தலைப்புகளுக்குப் பொருத்தமான செய்தியைத் தேர்வு செய்யலாம் அல்லது வேறொரு தலைப்பில் ஒரு செய்தியை அவர்கள் தேர்வு செய்யலாம்.

முதலிலேயே தேர்வு செய்யப்பட்ட செய்தியை வாசிக்கவும் மற்றும் சுவிசேஷ சத்தியங்களைப் பகிர்ந்து கொள்ளவும், அவற்றின்படி எப்படி செயல்படுவது என்பது பற்றிய கருத்துக்களுக்காகவும் தலைவர்களும் ஆசிரியர்களும் அங்கத்தினர்களை ஊக்குவிக்கும் வழிகளை கண்டு பிடிக்க வேண்டும். இரட்சகரின் வழியில் போதித்தலில் உள்ள கொள்கைகள் அடிப்படையில் உள்ள பின்வரும் ஆலோசனையளிக்கப்பட்ட கற்கும் பயிற்சிகள், அங்கத்தினர்கள் பொது மாநாட்டு செய்திகளிலிருந்து கற்க உதவக்கூடும்.

"பொது மாநாட்டு செய்திகளை உங்கள் குடும்ப இல்ல மாலைகளிலும், உங்கள் சுவிசேஷ போதனையிலும், உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் உரையாடல்களிலும் இணைக்கும் வழிகளை விழிப்புடன் தேடவும்."

தலைவர் ரசல் எம். நெல்சன், "Let Us All Press On," *Liahona,* May 2018, 118.

**எம். ரசல் பல்லார்ட்,** *"Precious Gifts from God," 9–11*

தீர்க்கதரிசிகள், கிறிஸ்துவில் விசுவாசம், திருவிருந்து, மற்றும் சேவை உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளை தலைவர் பல்லார்டின் செய்தி குறிப்பிடுகிறது–உங்கள் குழும அல்லது ஒத்தாசைச் சங்க அங்கத்தினர்கள் விசேஷித்த அர்த்தமுள்ள தலைப்புக்களைக் கண்டுபிடிக்கலாம். அவர்களுக்கு உணர்த்துகிற ஒன்றை இச்செய்தியிலிருந்து பகிர்ந்து கொள்ள அங்கத்தினர்களை அழைக்கவும். தலைவர் பல்லார்டின் செய்தியில் நாம் என்ன அழைப்புகளை அல்லது வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆசீர்வாதங்களைக் காண்கிறோம். இக்கலந்துரையாடலின் விளைவாக அவர்கள் உணர்த்தப்பட்டதாக உணர்கிறவற்றைப் பற்றி சில நிமிடங்கள் சிந்திக்க அங்கத்தினர்களை அழைப்பதைக் கருத்தில் கொள்ளவும்.

**காரி ஈ. ஸ்டீவென்சென்,** *"The Heart of a Prophet," 17–20*

ஒரு புதிய தீர்க்கதரிசியின் அழைப்பின் "உயர்வான தன்மையைப் புரிந்துகொள்ள" அங்கத்தினர்களுக்கு உதவ, இந்த தெய்வீக முறையின் முக்கியத்துவத்தையும் பரிசுத்த தன்மையையும் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுகிற சத்தியங்களையும் உள்ளுணர்வுகளையும் தேடி, மூப்பர் ஸ்டீவென்செனின் செய்தியில் தேட நீங்கள் அங்கத்தினர்களை அழைக்கலாம். சபைத்தலைவராக தலைவர் நெல்சன் ஆதரிக்கப்பட்ட பயபக்தியான கூடுகையின்போது, அவர்கள் உணர்ந்ததை அங்கத்தினர்கள் பகிர்ந்துகொள்ள அழைப்பதைக் கருத்தில் கொள்ளவும். நீங்கள் பலகையில் ஒரு இருதயத்தை வரைந்து, தலைவர் நெல்சனின் இருதயத்தையும் குணத்தையும் விவரிக்கிற வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் அதில் எழுதும்படி அங்கத்தினர்களை அழைக்கலாம். நம்மை ஆசீர்வதித்த எதை அவர் போதித்திருக்கிறார்?

**நீல் எல். ஆண்டர்சன்,** *"The Prophet of God," 24–27*

மூப்பர் ஆண்டர்சனின் செய்தியைக் கலந்துரையாடுவது வாழ்ந்து கொண்டிருக்கிற தீர்க்கதரிசிகள் மீது அங்கத்தினர்களின் விசுவாசத்தைப் பெலப்படுத்த முடியும். தேவன் பூமியில் ஏன் தீர்க்கதரிசிகளை வைத்திருக்கிறார், நாம் ஏன் அவர்களைப் பின்பற்றுகிறோம் என அவர்கள் புரிந்துகொள்ள உதவுகிற ஒன்றை இச்செய்தியில் தேட அவர்களை நீங்கள் அழைக்கலாம். நமக்கு ஒரு தீர்க்கதரிசி இருப்பதால் நாம் எவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். தலைவர் ரசல் எம். நெல்சன் கர்த்தரின் தீர்க்கதரிசி எனவும், பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையின் தலைவர் எனவும், எப்படி அவர்கள் ஒரு சாட்சி பெற்றனர் என அங்கத்தினர்கள் பகிர்ந்து கொள்ளலாம்.

**டேவிட் ஏ. பெட்னார்,** *"Meek and Lowly of Heart," 30–33*

மூப்பர் பெட்னாரின் செய்தி பற்றிய கலந்துரையாடலைத் தூண்ட, நீங்கள் கரும்பலகையில் சாந்த குணம் ...ஆக உள்ளது, சாந்த குணம் ...ஆக இல்லை என நீங்கள் எழுதலாம். அங்கத்தினரகள் பின்பு மூப்பர் பெட்னாரின் செய்தியில் தேடி, இந்த வாசகங்களை நிறைவுசெய்கிற சொற்றொடர்களை பலகையில் எழுதலாம். நாம் அதிக சாந்த குணமுள்ளவர்களாக இருக்க நம்மைத் தூண்டுகிற எதை நாம் இச்செய்தியில் கற்கிறோம்". அதிக சாந்த குணமுள்ளவர்களாக ஆக மூப்பர் பெட்னாரின் ஆலோசனைகளை நாம் எப்படி பயன்படுத்தலாம்?

**போனி எல். ஆஸ்கர்சன்,** *"Young Women in the Work," 36–38*

சிந்திக்க தூண்டுகிற ஒரு வழி கேள்விகள். கரத்தரின் பணியில் நாம் எப்படி இளம்பெண்களை ஈடுபடுத்த முடியும் என்பன



போன்ற சகோதரி ஆஸ்கர்சனின் செய்தி பதிலளிக்கிற சில கேள்விகளை பலகையில் எழுதுவதைக் கருத்தில் கொள்ளவும். இக்கேள்விகளுக்கு பதில்களுக்காக அவரது செய்தியில் தேடவும், அவர்கள் கற்றதைக் கலந்துரையாடவும் அங்கத்தினர்களை அழைக்கவும். இளம் பெண்கள் ஊழியத்தில் ஈடுபடுத்தப்படும்போது, என்ன ஆசீர்வாதங்கள் வருகின்றன. இளம் பெண்களுடன் ஊழியம் செய்தபோது அவர்கள் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வகுப்பு அங்கத்தினர்கள் பகிரலாம். நமது கலந்துரையாடலின் அடிப்படையில், நாம் என்ன உணர உணர்த்தப்படுகிறோம்?

**டேல் ஜி. ரென்லண்ட்,** *"Family History and Temple Work: Sealing and Healing," 46–49*

தண்ணீர் அதிலிருந்து பொங்கிவருகிற ஆலயம் பற்றிய எசேக்கியேலின் தரிசனம் பற்றி மூப்பர் ரென்லண்ட் போதித்தார் (எசேக்கியேல் 47 8–9). பார்க்கவும். ஒருவேளை குழும அல்லது ஒத்தாசைச் சங்க அங்கத்தினர் இத்தரிசனம் பற்றிய படத்தை பலகையில் வரையலாம். ஆலயம் மற்றும் குடும்ப வரலாற்றுப் பணியின் ஆசீர்வாதங்கள் எவ்வாறு எசேக்கியேலின் தரிசனத்திலுள்ள தண்ணீர் போல இருக்கிறது? குடும்ப வரலாறு மற்றும் ஆலயப்பணியை நமது வாழ்க்கையின் வழக்கமான பகுதியாக ஆக்க நாம் என்ன செய்யலாம்?

**டி. டாட் க்றிஸ்டாபர்சன்,** *"The Elders Quorum," 55–58*

மூப்பர்கள் குழுமத்தில், "இக்காரியங்களின் நோக்கம்" என்ற தலைப்பிடப்பட்ட மூப்பர் க்றிஸ்டாபர்சனின் செய்தியின் பகுதியை வாசிக்க குழும அங்கத்தினர்களை நீங்கள் அழைக்கலாம். நாம் இந்த நோக்கங்களை நிறைவேற்றுகிறோம் என்பதை உறுதிசெய்ய நாம் என்ன செய்ய முடியும்? ஒத்தாசைச் சங்கத்தில், மூப்பர் க்றிஸ்டாபர்சன் விவரிக்கிற மெல்கிசேதேக்கு ஆசாரியத்துவ குழுமத்தின் மாற்றங்கள் பற்றி, சுருக்கமாக சொல்ல ஒருவரை நீங்கள் அழைக்கலாம். உங்கள் ஒத்தாசைச் சங்க பணிகளுக்குப் பொருந்துகிற இந்த மாற்றங்களில் உள்ள கொள்கைகளை சகோதரிகள் அடையாளம் காணலாம். மூப்பர்கள் குழுமத்தில் அல்லது ஒத்தாசைச் சங்கத்தில் சகோதரர் கோட்ஸின் கதையிலிருந்து என்ன கற்கிறார்கள் மற்றும் அவர்களது பணியில் அது எப்படி பயன்படுகிறது என அங்கத்தினர்கள் கலந்துரையாடலாம்.

**ரோனால்ட் ஏ. ராஸ்பாண்ட்,** *"Behold! A Royal Army," 58–61*

ஒருவேளை "Behold! A Royal Army" (Hymns, no. 251) ஒன்றிணைந்து பாடுவது, கேட்பது அல்லது வார்த்தைகளை வாசிப்பது மூப்பர் ராஸ்பாண்டின் செய்தி பற்றி கலந்துரையாட உணர்த்தலாம். ஆசாரியத்துவ குழுமங்களும் ஒத்தாசைச் சங்கங்களும் எவ்வாறு ராஜ சேனைபோல இருக்கின்றன? ஆசாரியத்துவ குழுமங்களை மாற்றியமைப்பதிலிருந்து வரக்கூடியதாக மூப்பர் ராஸ்பாண்ட் குறிப்பிடக்கூடிய "திரளான ஆசீர்வாதங்களை" தேடிப்பார்த்து அங்கத்தினர்கள் கலந்துரையாடலாம். இந்த மாற்றங்களை செயல்படுத்துவதிலிருந்து என்ன பிற ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறோம் அல்லது பெறும்படியாக நாம் நம்புகிறோம். "வெவ்வேறு ஆசீர்வாதங்கள்" மற்றும் ஆலோசனையளித்தல் போன்ற ஆசீர்வாதங்களை ஒத்தாசைச் சங்கங்கள் முழுமையாகப் பெறலாம்.

**ஹென்றி பி. ஐரிங்,** *"Inspired Ministering," 61–64*

அவரைக் கவர்ந்த ஊழியம் செய்தல் பற்றிய இரண்டு திருவிருந்து கூட்டங்கள் பற்றி தலைவர் ஐரிங் போதிக்கிறார். ஒருவேளை நீங்கள் குழுமம் அல்லது ஒத்தாசைச் சங்க பாதியை 14 வயது சிறுவனின் வார்த்தைகளை பரிசீலிக்கவும் மற்றும் அடுத்த பாதியை வீட்டு போதகர் பற்றிய கதையை பரிசீலிக்கவும் கேட்கலாம். அவர்கள் வாசிக்கும்போது, ஒருவருக்கு புதிதாக ஊழியம் செய்ய பணிக்கப்பட்டுள்ள வாலிபனுக்கு அல்லது இளம்பெண்ணுக்கு கொடுக்கக்கூடிய அறிவுரை பற்றி சிந்திக்கலாம். "நமது ஊழிய சேவையில் நாம் எப்படி அதிகமாக உணர்த்தப்பட்டவர்களாகவும் தயாளமுள்ளவர்களாகவும் ஆகமுடியும்?"

**டாலின் எச். ஓக்ஸ்,** *"The Powers of the Priesthood,"* 65-68

ஒரு கலந்துரையாடல் தொடங்க நீங்கள் பலகையில் தலைவர் ஓக்ஸின் செய்தியின் நான்கு பாகங்களின் தலைப்புக்களை எழுதலாம். பின்பு ஒவ்வொரு அங்கத்தினரையும் ஒரு பாகத்தை அமைதியாக வாசித்து அப்பாகத்திலுள்ள முக்கிய செய்தியை ஒரு வாக்கியத்தில் பலகையில் எழுத அழைக்கலாம். தாங்கள் வாசித்ததினிமித்தம் அங்கத்தினர்கள் உணர்த்தப்பட்டதாக உணர்கிறதை பகிரலாம். தலைவர் ஓக்ஸின் செய்தியிலுள்ள போதனைகளை நாம் பயன்படுத்தும்போது, ஆசாரியத்துவம் தரித்தவர்களாக அல்லது ஒத்தாசைச் சங்க சகோதரிகளாக நமது சேவை எப்படி அதிகரிக்கிறது?

**தலைவர் ரசல் எம். நெல்சன்,** *"Ministering with the Power and Authority of God," 68–75*

ஆசாரியத்துவம் தரித்தவர்கள் "எழவும்," பரலோக பிதாவின் பிள்ளைகளை ஆசீர்வதிக்க ஆசாரியத்துவத்தைப் பயன்படுத்தவும், தலைவர் நெல்சன் அழைக்கிறார். உங்கள் குழும அல்லது ஒத்தாசைச் சங்க அங்கத்தினர்களை அவர் கொடுக்கிற உதாரணங்களைத் தேடவும், அவர்களது குடும்பங்களையும் பிறரையும், ஆசீர்வதிக்க ஆசாரியத்துவம் எப்படி பயன்படுத்தப்படலாம் என புரிந்து கொள்ள அவை எவ்வாறு நமக்கு உதவுகின்றன என கலந்துரையாடவும் அழைக்கலாம். ஆசாரியத்துவ வல்லமையால் நாம் ஆசீர்வதிக்கப்பட்ட எந்த அனுபவங்களைப் பகிரலாம்? "அவரது நாமத்தில் ஊழியம் செய்ய" தேவனின் ஆசாரியத்துவத்தைப் பயன்படுத்த விசுவாசம் பெற நாம் பிறருக்கு எப்படி உதவலாம்?

**ரெய்னா ஐ. அபுர்ட்டோ,** *"With One* Accord," 78-80

கர்த்தரின் பணியைச் செய்ய நீங்கள் எவ்வளவு நன்றாக ஒன்றுபட்டு உழைக்கிறீர்கள் என மதிப்பிட சகோதரி அபுர்ட்டோவின் செய்தி உங்கள் குழுமத்துக்கு அல்லது ஒத்தாசைச் சங்கத்துக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குகிறது. இதைச் செய்ய அங்கத்தினர்களுக்கு உதவ, மோனார்க் பட்டாம்பூச்சிகள், நேபியர்களிடம் இரட்சகரின் வருகை, (சுவிசேஷ கலைப் புத்தகம் 82,83,84 பார்க்கவும்) மற்றும் சபையின் மனிதாபிமான பணி(பார்க்கவும்) படங்களை நீங்கள் காட்டலாம். ஒன்றாக உழைப்பதன் நோக்கங்களையும் ஆசீர்வாதங்களையும் பற்றி போதிக்க இந்த உதாரணங்களை சகோதரி அபுர்ட்டோ பயன்படுத்தினார் என அங்கத்தினர்கள் இச்செய்தியில் தேடி கண்டுபிடிக்கலாம். "ஒருமனப்பட்டு" பணியாற்ற நாம் என்ன செய்யலாம்?

## நமது கூட்டங்களுக்கான ஒரு மாதிரி

**1.** (ஒரு தலைமை அங்கத்தினரால் வழிநடத்தப்பட்ட)முந்தய ஆசாரியத்துவ அல்லது ஒத்தாசைச் சங்க கூட்டங்களில் பெறப்பட்ட உணர்வுகள் மற்றும் அழைப்புகள்படி செயல்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**2.** அழைக்கப்பட்ட (ஒரு ஆசிரியரால் வழிநடத்தப்பட்டு). ஒருமித்து கற்கவும். அங்கத்தினர்களை இவற்றுக்காக அழைப்பது அடிக்கடி உதவிகரமானதாக இருக்கலாம்:

அ. மாநாட்டு செய்தியில் ஏதாவதொன்றைத் தேடவும் (ஒரு கேள்விக்கு பதில், உணர்த்தப்பட்ட பாகம், அல்லது ஒரு கொள்கை பற்றிய உதாரணம் போன்றவை).

ஆ. அவர்கள் காண்பனவற்றை பகிர்ந்து கலந்துரையாடவும்.

இ. அவர்களது வாழ்க்கை மற்றும் அனுபவங்களுக்கு எப்படி பொருந்துகிறதென்பதைக் கருத்தில் கொள்ளவும்.

**3.** (ஒரு தலைமை அங்கத்தினரால் வழிநடத்தப்பட்டு) தனிநபராகவோ அல்லது குழுவாகவோ செயல்பட திட்டமிடவும்.



**ஹென்றி பி. ஐரிங்,** *"His Spirit to Be with You," 86–89*

பரிசுத்த ஆவியைப் பெற நமது வாஞ்சையையும் திறமையையும் அதிகரிக்க, தலைவர் ஐரிங் பல தனிப்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து, குறிப்பிட்ட வழிநடத்துதல்கள் கொடுக்கிறார். அவரது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபின், பரிசுத்த ஆவியானவர் அவர்களது இருதயங்களைத் தொட்டபோது அல்லது சத்தியத்தை உறுதி செய்தபோது, உங்கள் குழும அல்லது ஒத்தாசைச் சங்க அங்கத்தினர்கள் அதுபோன்ற எந்த அனுபவங்களைப் பகிர முடியும்? "ஆவியின் பணிவிடையைப் பெற நமது இருதயங்களைத் திறக்க" உதவ தலைவர் பகிர்ந்து கொள்கிற வழிநடத்தல்களை அங்கத்தினர்கள் பலகையில் பட்டியலிடலாம். நமது சொந்த வாழ்க்கையிலும் குடும்பங்களிலும் இந்த வழிநடத்தல்களைப் பின்பற்றுவது எப்படி உதவ முடியும்? நமது குழுமத்தில் அல்லது ஒத்தாசைச் சங்கத்தில்?

**டாலின் எச். ஓக்ஸ்,** *"Small and Simple Things," 89–92*

சிறிய மற்றும் எளிய காரியங்கள் எப்படி நன்மை அல்லது தீமைக்காக வல்லமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என போதிக்க தலைவர் ஓக்ஸின் செய்தி உருவகங்களைக் கொண்டிருக்கிறது. இந்த உருவகங்களில் மர வேர்கள், துடுப்புப் போடும் குழு, கயிற்று இழைகள், சொட்டுகிற நீர் போன்றவை உள்ளன. அங்கத்தினர்கள் இந்த உருவகங்களை வாசித்து, இடைவிடாது எளிய மற்றும் சிறிய காரியங்களை செய்வதன் வல்லமைகள் பற்றி அவை என்ன போதிக்கின்றன என கலந்துரையாடலாம். நமது வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் செல்வாக்கைக் கொண்டுவருகிற சிறிய மற்றும் எளிய காரியங்கள் யாவை" தலைவர் ஓக்ஸின் ஆலோசனையைப் பின்பற்ற செய்ய, அவர்களுக்கு உணர்த்தியதைப் பற்றி சிந்திக்க அங்கத்தினர்களை அழைக்கவும்.

**ரசல் எம். நெல்சன்,** *"Revelation for the Church, Revelation for Our Lives," 93–96*

அவரது செய்தியில் தலைவர் நெல்சன், "வெளிப்படுத்தல் பெற நமது ஆவிக்குரிய திறமையை" அதிகரிக்குமாறு நம்மிடம் வேண்டுகின்றார். அவரது வழிநடத்தலை அங்கத்தினர்கள் பின்பற்ற உதவ, பின்வருவன போன்ற கேள்விகளை நீங்கள் எழுதலாம். நமக்கு வெளிப்படுத்தல் ஏன் தேவை? தனிப்பட்ட முறையிலும், நாம் ஒன்றாக ஆலோசிக்கும்போதும், வெளிப்படுத்தல் பெறும் நமது திறமையை நாம் எப்படி அதிகரிக்க முடியும்? நாம் வெளிப்படுத்தலை நாடினால், தலைவர் நெல்சன் என்ன என்ன ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் செய்கிறார்? அங்கத்தினர்களை குழுக்களாகப் பிரித்து, இக்கேள்விகளில் ஒன்றுக்கு பதில்களைக் கண்டுபிடிக்கவும், பகிரவும் ஒவ்வொரு குழுவையும் அழைக்கவும்.

**கெரிட் டபிள்யூ. காங்,** *"Christ the Lord Is Risen Today," 97–98*

நமது உடன்படிக்கைகள் மற்றும் இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தி பற்றிய மூப்பர் காங்கின் செய்தியிலிருந்து உங்கள் குழுமம் அல்லது ஒத்தாசைச் சங்க அங்கத்தினர்கள் என்ன கற்றுக்கொள்ள முடியும்? இரட்சகரின் பாவநிவர்த்தியும் நமது உடன்படிக்கைகளும் ஒன்றாக கிரியை செய்து நமக்குக் கொடுக்கக்கூடிய ஆசீர்வாதங்களைக் காண இச்செய்தியில் தேட அங்கத்தினர்களை அழைக்கவும். பின்பு அவர்கள் கண்டுபிடித்தது பற்றிய பின்வரும் கேள்விகள் கேட்பதைக் கருத்தில் கொள்ளவும்: நமக்கு சாத்தியப்படுத்தவும், கண்ணியப்படுத்தவும் நமது உடன்படிக்கைகளும் பாவநிவர்த்தியும் எப்படி ஒன்றாக கிரியை செய்கின்றன? எதைப் பிடித்துக்கொள்ளவும் விட்டுவிடவும் அவை நமக்கு உதவுகின்றன?

**யூலிசஸ் சோர்ஸ்,** *"Prophets Speak by the Power of the Holy Spirit," 98-99*

கர்த்தரின் சித்தத்தை செய்வதில் நாம் குறைவுள்ளவர்களாக உணரும்போது விசுவாசத்துடன் செயல்பட மூப்பர் சோர்ஸின் செய்தி நமக்கு உணர்த்த முடியும். ஒரு அப்போஸ்தலராக தன் புதிய அழைப்பை பெற்றபோது, மூப்பர் சோர்ஸ் எவ்வாறு ஆறுதலும் உறுதியும் பெற்றார். ஊழியத்தலைவராக அழைக்கப்பட்ட அனுபவத்திலிருந்து அவர் என்ன கற்றார். அவரது அனுபவங்களிலிருந்து நாம் என்ன கற்கலாம்? கர்த்தர் அவர்கள் செய்ய விரும்பிய ஒன்றைப் பற்றி அவர்கள் உறுதியாக நினைக்காதபோது, உணர்ந்த அனுபவங்களைப் பகிர அங்கத்தினர்களுக்கு நேரம் வழங்கவும். முன்னேறிச் செல்ல விசுவாசம் காண அவர்கள் என்ன செய்தார்கள்?

**ஜெப்ரி ஆர். ஹாலண்ட்,** *"Be With and Strengthen Them," 101–3*

உங்கள் குழும அல்லது ஒத்தாசைச் சங்க அங்கத்தினர்களாக, "ஆசாரியத்துவ மற்றும் ஒத்தாசைச் சங்க ஊழிய சிந்தனையில்" உள்ள மாற்றங்கள் பற்றி கற்று அவர்கள் என்ன கேள்விகள் கேட்டனர். மூப்பர் ஹாலண்டின் செய்தி பதில்கள் தரலாம். மூப்பர் ஹாலண்ட் போதிப்பது இந்த மாற்றங்களின் அஸ்திவாரம் என அங்கத்தினர்கள் சுவிசேஷக் கொள்கைகளுக்காக தேடலாம். அவரது செய்தியில் என்ன அழைப்புகளை நாம் காண்கிறோம்? என்ன ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளன? ஊழியம் செய்யும் இப்புதிய வழிகள் "கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களாக" நமக்கு எப்படி உதவுகின்றன?

**ஜீன் பி. பிங்காம்,** *"Ministering as the Savior Does," 104–7*

அவரது செய்தியில், சகோதரி பிங்காம், நமது ஊழிய முயற்சிகளை வழிநடத்தக்கூடிய கேள்விகளை நம்மை நாமே கேட்க நம்மை அழைக்கிறார். தங்கள் முயற்சிகளை இந்த கேள்விகள் எப்படி வழிநடத்த முடியும் என அங்கத்தினர்கள் கலந்துரையாடலாம். பின்னர் "[ஊழியம் செய்வது] எதைப் போலிருக்கிறது" என்ற சகோதரி பிங்காமின் கேள்விக்கு பதில் தேடலாம். தனிநபர்கள் ஊழியம் செய்தல் பற்றி சகோதரி பிங்காம் பகிர்கிற சில உதாரணங்களை பரிசீலிக்க நேரம் செலவளித்து, அங்கத்தினர்கள் தங்கள் சொந்த உதாரணத்தைப் பகிர அழைக்கலாம். நாம் ஏன், எப்படி ஊழியம் செய்கிறோம் என்ற நமது புரிந்துகொள்ளலை அதிகரிக்கிற எதை சகோதரி பிங்காமின் செய்தியில் நாம் காண்கிறோம்"

**டியட்டர் எப். உக்டர்ப்,** *"Behold the Man!" 107–10*

உலக சரித்திரத்தில் பாவ நிவாரண பலியும், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும் மிக முக்கிய நிகழ்ச்சிகள் என ஒருவர் புரிந்துகொள்ள நாம் எப்படி உதவலாம்? மூப்பர் உக்டர்பின் செய்தியின் பாகங்களை அவர்கள் வாசிக்கும்போது, இக்கேள்வி பற்றி சிந்திக்க அங்கத்தினர்களை அழைக்கவும். அவர்களுக்கு இந்த நிகழ்ச்சிகள் மிக முக்கியம் ஏன் என விளக்க அவர்ளுக்கு உதவக்கூடிய எதை அவர்கள் காண்கிறார்கள்? இக்கலந்துரையாடலுக்குப் பிறகு, அந்த மனுஷனைப் பார்ப்பது அவர்களுக்கு எப்படி இருக்கிறது என்பது பற்றி வகுப்பு அங்கத்தினர்கள் பேசலாம். "அந்த மனுஷனைப் பார்க்க" நாம் எப்படிக் கற்றோம்?

**க்வெண்டின் எல். குக்,** *"Prepare to Meet God," 114–17*

கர்த்லாந்து ஆலயத்தில் ஆசாரியத்துவ திறவுகோல்களின் மறுஸ்தாபிதத்தை சுருக்கிச் சொல்ல ஒரு அங்கத்தினரை அழைத்து, நீங்கள் மூப்பர் குக்கின் செய்தி பற்றிய கலந்துரயாடலை தொடங்கலாம். மூப்பர் குக்கின் செய்தியின்படி, இந்த திறவுகோல்கள் சம்மந்தப்பட்ட எந்த பொறுப்புகளை சபை கொண்டுள்ளது? இந்த பொறுப்புக்கள் இன்று சபையில் எவ்விதம் வெளிப்படுகின்றன? நீதி, ஒற்றுமை, மற்றும் சமத்துவம் என்ற வார்த்தைகளை பலகையில் எழுதி, மூப்பர் குக்கின் செய்தியில் இக்கொள்கைகளில் ஒவ்வொன்றும் பற்றி, அவர்கள் பெறும் உள்ளுணர்வுகளை பகிர அங்கத்தினர்களை கேட்கவும். சபையின் பரிசுத்த பொறுப்புக்களை நிறைவேற்ற இக்கொள்கைகள் எவ்வாறு நமக்கு உதவுகின்றன?



# நான்காம் ஞாயிற்றுக்கிழமை

## கூட்டங்கள்

ஒவ்வொரு மாதமும் நான்காம் ஞாயிற்றுக் கிழமையில், மூப்பர்கள் குழுமங்களும், ஒத்தாசைச் சங்கங்களும் பிரதான தலைமையாலும் பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தாலும் தேர்வு செய்யப்படுகிற தலைப்புகளை கலந்துரையாடுகிறார்கள். நான்காம் ஞாயிற்றுக்கிழமை தலைப்பு ஒவ்வொரு பொது மாநாட்டுக்கும் பிறகு மாற்றம் செய்யப்படும். இப்போதிலிருந்து அடுத்த மாநாடு வரை, தலைப்பு "பிறருக்கு ஊழியம் செய்தல்". ஒவ்வொரு மாதமும் தலைவர்கள் அல்லது ஆசிரியர்கள் ஊழியம் செய்வது சம்மந்தப்பட்ட பின்வரும் கொள்கைகள் எதையாவது பற்றி கலந்துரையாடலை வழிநடத்தத் தெரிந்து கொள்ளலாம்.

ஊழியம் செய்தல் பற்றிய கலந்துரையாடல்களுக்கு வலுசேர்க்கிற கூடுதல் ஆதாரங்களுக்கு, லியஹோனாவின் எதிர்கால பதிப்புக்களின் கட்டுரைகளில் "ஊழியம் செய்யும் கொள்கைகளும்" பார்க்கவும்.

**ஊழியம் செய்தல் என்றால் என்ன?**

உங்கள் தொகுதியில் அல்லது கிளையிலுள்ள அங்கத்தினர்களுக்கு ஊழியம் செய்தல் என்றால் என்ன? கண்டுபிடிக்க பலகையில் நீங்கள் ஊழியம் செய்தல் என எழுதி, ஊழியம் செய்தலுடன் அவர்கள் தொடர்புபடுத்துகிற, வார்த்தைகளை அதைச்சுற்றிலும் எழுத அழைக்கலாம். பின்வருவன போன்ற வசனங்களிலிருந்து பட்டியலில் சேர்க்க அங்கத்தினர்கள் வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் கண்டுபிடிக்கலாம்: மத்தேயு 25:34–40; லூக்கா 10:25–37; 2 நெப்பி 25:26; மோசியா 18:8–9; 3 நெப்பி 18:25; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 81:5. ஊழியம் செய்தல் பற்றி இந்த வசனங்களிலிருந்து என்ன கற்கிறோம்? அவர்கள் பார்த்த ஊழியம் செய்தலின் உதாரணங்களை அங்கத்தினர்கள் பகிருமாறு நீங்கள் கேட்கலாம். ஜனங்களின் ஆவிக்குரிய மற்றும் உலகப்பிரகார தேவைகளை சந்திக்க, நமது ஊழியம் செய்தல் எப்படி உதவ முடியும்? கிறிஸ்துவுக்கு நெருக்கமாக வர ஜனங்களுக்கு அது எப்படி உதவ முடியும்?

**ஊழியம் செய்ய இரட்சகர் நமது பரிபூரண உதாரணம்.**

ஆற்றலுடன் ஊழியம் செய்வது பற்றி கற்க, பிறருக்கு இரட்சகர் ஊழியம் செய்த, வேதங்களிலுள்ள கதைகளை அங்கத்தினர்கள் பகிரலாம், யோவான் 4:6 மற்றும் மாற்கு 2:1–12ல் பல உதாரணங்கள் காணப்படுகின்றன. இந்தக் கதைகளில் எது அவர்களை கவர்கிறது மற்றும் ஊழியம் செய்தல் பற்றி என்ன கொள்கைகளை அவர்கள் கற்கிறார்கள் என அங்கத்தினர்கள் பகிரலாம். உதாரணமாக இரட்சகர் பிறருக்கு தன் சேவையை எவ்வாறு

தனிமனிதர்களுக்கு செய்கிறார். அவர் எப்படி ஜனங்களின் ஆவிக்குரிய தேவைகளையும் உலகப்பிரகார தேவைகளையும் நிவர்த்தி செய்தார். தங்கள் ஊழியத்தில் இக்கொள்கைகளை ஜனங்கள் பயன்படுத்தியதை அவர்கள் பார்த்த நேரங்கள் பற்றி வகுப்பு அங்கத்தினர்கள் பகிரலாம்.

**ஊழியம் செய்தல் கிறிஸ்து போன்ற** அன்பால் தூண்டப்படுகிறது.

கிறிஸ்து போன்ற அன்பால் தூண்டப்படுகிற ஊழியம் செய்வதன் வல்லமையை கண்டுபிடிக்க, பலகையில் நீங்கள் பின்வரும் வாக்கியங்களை எழுதி, காலியிடங்களை நிரப்ப ஆலோசனையளிக்க அங்கத்தினர்களை அழைக்கலாம். நான் சேவிக்கிற ஜனங்களை நான் உண்மையாகவே நேசிக்கும்போது, நான்_______________. பிற காரணங்களுக்காக நான் சேவை செய்யும்போது, நான்________________. நாம் பிறருக்கு ஊழியம் செய்வது கிறிஸ்து போன்ற அன்பினால் தூண்டப்படுகிறது என்பதை உறுதிசெய்ய நாம் என்ன செய்யலாம்? நாம் ஊழியம் செய்ய பணிக்கப்பட்டவர்களிடம் கிறிஸ்துபோன்ற அன்பை எப்படி விருத்தி செய்யலாம். (மரோனி 7:45–48 பார்க்கவும்). கிறிஸ்து போன்ற அன்பால் உணர்த்தப்பட்ட ஊழியம் செய்கிற உதாரணத்தை ஒருவேளை அங்கத்தினர்கள் பகிரலாம்.

**தன் பிள்ளைகள் அனைவரும் கண்காணிக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும் என தேவன் விரும்புகிறார்.**

தலைவர் ரசல் எம். நெல்சன் சொன்னார், “கர்த்தரின் உண்மையான உயிருள்ள சபையின் அடையாளம், எப்போதுமே தேவனின் தனிப்பட்ட பிள்ளைகளுக்கும், குடும்பங்களுக்கும் ஊழியம் செய்ய ஒழுங்கமைக்கப்பட்ட, வழிநடத்தப்பட்ட முயற்சியாயிருக்கும்” (“Ministering with the Power and Authority of God,” Liahona, May 2018, 69.). தனிநபர்களை சிறப்பாக பராமரிக்க நமக்கு சபை உதவுகிற “ஒழுங்கமைக்கப்பட்ட, வழிநடத்தப்பட்ட” தலைவர் நெல்சனால் போதிக்கப்பட்ட வழிகள் யாவை? இந்த முயற்சிகள் ஏன் கர்த்தருடைய உண்மையான உயிருள்ள சபையின் அடையாளமாக இருக்கின்றன? (சில கருத்துக்களுக்கு மோசியா 1821–22 மற்றும் மரோனி 64–6 பார்க்கவும்). ஜனங்கள் தங்கள் சபை அழைப்புகளில் அல்லது பணிகளில் ஊழியம் செய்ததால், நமது வாழ்க்கையில் அல்லது பிறரது வாழ்க்கையில் என்ன ஆசீர்வாதங்கள் வந்தன?

**தேவனின் பார்வையில் ஆத்துமாக்களின் தகுதி மகத்தானது.**

நாம் ஜனங்களைப் பார்க்கிற விதம் நாம் அவர்களுக்கு ஊழியம் எவ்வாறு செய்கிறோம் என்பதை பாதிக்கிறது என மோசியாவின் குமாரர்களின் அனுபவங்கள் விளக்குகின்றன. நெப்பியர்கள் எவ்வாறு லாமானியர்களைப் பார்த்தார்கள் மற்றும் மோசியாவின் குமாரர்கள் லாமானியர்களை எவ்வாறு பார்த்தார்கள் என நீங்கள் பலகையில் எழுதலாம். இந்த ஒவ்வொரு வாசகங்கள் கீழே எழுத வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் கண்டுபிடிக்க, மோசியா 28:1–3 மற்றும் ஆல்மா 26:23–26ல் தேட பின்பு நீங்கள் அங்கத்தினர்களை அழைக்கலாம். நாம் ஜனங்களைப் பார்க்கிற விதம் நாம் அவர்களுக்கு ஊழியம் செய்யும் விதத்தைப் பாதிக்கிறது என்பது பற்றி இந்த ஒப்பீடு நமக்கு என்ன போதிக்கிறது? ஜனங்களை தேவன் பார்க்கிற விதமாக பார்க்க நாம் எப்படி கற்க முடியும். (கோ.உ 1810–16 பார்க்கவும்).

**உண்மையான ஊழியக்காரர்கள் பிறரின் தேவைகளில் கவனம் செலுத்துகிறார்கள்.**

நாம் ஊழியம் செய்யும் பிறரின் தேவைகளில் கவனம் செலுத்துவதன் மதிப்பை அங்கத்தினர்கள் புரிந்துகொள்ள உதவ, ஊழியம் செய்வதை நீங்கள் பரிசுகள் கொடுப்பதற்கும் பெறுவதற்கும் ஒப்பிடலாம். நமக்கு என்ன வேண்டும் அல்லது தேவை என தெளிவாக அறிந்த ஒருவரிடமிருந்து நாம் எப்போதாவது அர்த்தமுள்ள பரிசுகளை வாங்கியிருக்கிறோமா? சிந்தனை மிக்க பரிசைக் கொடுப்பது எவ்வாறு ஊழியம் செய்வதைப்போன்று இருக்கிறது. பிறரின் தேவைக்கேற்ப எப்படி ஜனங்கள் ஊழியம் செய்தார்கள் என காட்டுகிற மிக அண்மை பொது மாநாட்டு கதைகளிலிருந்து கலந்துரையாடுவதைக் கருத்தில் கொள்ளவும் (see, for example, JeanB. Bingham, “Ministering as the Savior Does,” Liahona, May 2018). அக்கொள்கையை விளக்குகிற பிற கதைகளையும் அங்கத்தினர்கள் பகிரலாம்.

பிறரின் தேவைகள் என்ன என நாம் எப்படி அறியலாம்? அவர்கள் ஊழியம் செய்கிற சில ஜனங்களின் பட்டியலை எழுத ஒவ்வொரு அங்கத்தினரையும் அழைக்கவும். ஒவ்வொரு பெயரையும் அடுத்து, “கிறிஸ்துவுக்கு நெருக்கமாக வர இவருக்கு என்ன தேவை” என்ற கேள்வியை எழுதவும். பொருத்தமானபடி, ஒவ்வொருவரும் பெற வேண்டிய நியமங்களை சேர்க்க அங்கத்தினர்களை ஊக்குவிக்கவும். பிறரின் தேவைகளை சந்திக்க அவர்களுக்கு உதவக்கூடிய இக்கேள்வி பற்றி தொடர்ந்து சிந்திக்கவும், உணர்த்துதல் நாடவும் அங்கத்தினர்களை அழைக்கவும்.

**பிறரின் ஊழியத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என கர்த்தர் விரும்புகிறார்.**

மூப்பர் ராபர்ட் டி. ஹேல்ஸ் சொன்னார்: “கொடுப்பதும் பெறுவதும் சுவிசேஷ திட்டத்துக்கு தேவை.... கஷ்டத்தில் இருப்பவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள்: ‘நான் இதை தனியாகவே செய்வேன்’ ... ‘என்னைக் கவனித்துக்கொள்ள என்னால் முடியும்’. மற்றொருவரின் உதவி தேவைப்படாதபடி அதிக செல்வந்தர் யாருமில்லை, தன் சக மனுஷருக்கு எதாவது விதத்தில் பயன்படாத அளவுக்கு வறியவர் யாருமில்லை என சொல்லப்பட்டிருக்கிறது. நம்பிக்கையோடு பிறரிடம் உதவி கேட்க மனதாயிருப்பதும், தயவாய் அதைக் கொடுப்பதுவும் நமது குணத்தின் பாகமாக இருக்க வேண்டும். (“We Can’t Do It Alone,” Ensign, Nov. 1975, 91, 93). சில சமயங்களில் பிறரின் உதவியை ஏற்க நாம் தயங்குகிறோம். உதவியை ஏற்றுக்கொள்ள சித்தமாயிருப்பது எப்படி நமக்கு சேவை செய்பவர்களை ஆசீர்வதிக்கிறது. பிறரின் பணிவிடையைப் பெற அவர்கள் அதிகமாக திறந்த மனதுடன் இருக்கும் வழிகளைப்பற்றி சிந்திக்க அங்கத்தினர்களுக்கு சிறிது நேரம் கொடுக்கவும். நாம் ஒருவருக்கொருவர் தேவை என்பது பற்றி 1 கொரிந்தியர் 12:13–21 என்ன ஆலோசனையளிக்கிறது?

**நாம் பிறருக்கு ஊழியம் செய்யும் அநேக வழிகள் இருக்கின்றன.**

நாம் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யக்கூடிய அநேக வழிகளை அங்கத்தினர்கள் சிந்திக்க உதவ, “அவர்களோடிருந்து அவர்களைப் பெலப்படுத்துங்கள்” என்ற மூப்பர் ஜெப்ரி ஆர். ஹாலண்டின் செய்தியைப் பரிசீலிக்க நீங்கள் அவர்களை அழைக்கலாம்(Liahona, May 2018, 101-3; see also “Ministering Principles” in upcoming issues of the Liahona). அங்கத்தினர்கள் சிறு குழுக்களாக பிரிந்து, ஒருவருக்கு உதவி தேவைப்படக்கூடிய பல நிலைமைகளைப்பற்றி ஒவ்வொரு குழுவும் சிந்திக்கலாம். அந்த நிலைமைகளில் தனிநபர்களின் ஆவிக்குரிய மற்றும் உலகப்பிரகார தேவைகளுக்கு ஜனங்கள் ஊழியம் செய்யக்கூடிய பல வழிகளை அவர்கள் சிந்திக்கலாம். அவர்கள் ஊழியம் செய்யக்கூடிய ஜனங்களை எந்த கலந்துரையாடப்பட்ட கருத்தாவது ஆசீர்வதிக்கக்கூடுமா தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து சிந்திக்க குழுக்களிடம் கேட்கவும். ■

© 2018 by Intellectual Reserve, Inc. எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆங்கில அங்கீகாரம் 3/18 மொழிபெயர்ப்பு அங்கீகாரம் 3/18 Come, Follow Me–For Elders Quorum and Relief Society, April 2018 ன் மொழிபெயர்ப்பு Tamil PD 60006160 418

